முக்கிய வார்த்தைகள்:
*இஸ்றா, மிஃராஜ்*
*நேரம்*
*மதிப்பு*
*அருள்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**16 ஜனவரி 2026 / 26 ரஜப் ஹிஜிரி 1447**

# <u>இஸ்றா, மிஃராஜ் : காலம் மற்றும் நேரத்தின்</u>

**اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي خَلَقَ فَسَوَّى، وَقَدَّرَ فَهَدَى، وَأَسْعَدَ وَأَشْقَى، وَأَضَلَّ بِحِكْمَتِهِ وَهَدَى. أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ الْعَلِيُّ الْأَعْلَى، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ الْمُصْطَفَى. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ وَمَنِ اهْتَدَى. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ، وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.**

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [முஃமின்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; **அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்**. அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் அடிபணிந்து நடந்து கொள்ளுங்கள்; அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்க ளிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மகிமையைச் சுட்டிக் காட்டும் அடையாளங்களுக்காக நமது உள்ளங்கள் திறக்கட்டுமாக! நமது "ஈமான்" எனும் ஓரிறை நம்பிக்கையானது, நமது வாழ்க்கையின் இறுதி நாள் வரை நமது உள்ளங்களில் ஆழமாக நங்கூரமிடப்பட்டதாக இருக்கட்டுமாக. ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

கடந்த வார ”குத்பா” பிரசங்கமானது, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் ”சீராஹ்” எனும் வாழ்க்கை வரலாற்றைப் படித்து ஆய்வு செய்வதன் அவசியத்தை எடுத்துரைத்தது. அதன் தொடர்ச்சியாக இன்றைய குத்பா பிரசங்கம், **இஸ்றா, மிஃராஜ்** எனப்படும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியைப் பற்றி சிந்திக்குமாறு அழைப்பு விடுக்கின்றது. இது ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு அற்புதமானப் பயணம் ஆகும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் ”அல்-இஸ்றா” எனும் அத்தியாயத்தின் முதல் வசனத்தில் இந்நிகழ்ச்சியைப் பற்றி பின்வருமாறு கூறுகிறான்:

سُبْحَٰنَ ٱلَّذِىٓ أَسْرَىٰ بِعَبْدِهِۦ لَيْلًا مِّنَ ٱلْمَسْجِدِ ٱلْحَرَامِ إِلَى ٱلْمَسْجِدِ ٱلْأَقْصَا ٱلَّذِى بَٰرَكْنَا حَوْلَهُۥ لِنُرِيَهُۥ مِنْ ءَايَٰتِنَآ ۚ إِنَّهُۥ هُوَ ٱلسَّمِيعُ ٱلْبَصِيرُ ١

பொருள்: அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன்; மேலானவன்; அவன் தன் அடியாரை பைதுல் ஹராமிலிருந்து [அதாவது, கஃபதுல்லாஹ்விலிருந்து] தொலைவிலிருக்கும் [பைதுல் முகத்தஸிலுள்ள] மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான். [மஸ்ஜிதுல் அக்ஸா வின்] சுற்றெல்லைகளை நாம் அபிவிருத்தி செய்து, வளப்படுத்தியுள்ளோம்; நம்முடைய அத்தாட்சிகளை அவருக்குக் காண்பிப்பதற்காக [அவ்வாறு அழைத்துச் சென்றோம்]. நிச்சயமாக அவன் [அல்லாஹ்] யாவற்றையும் செவியுறுவோனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கின்றான்.

மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே! இப்பயணத்தில் நடைபெற்ற அற்புதமாகிறது, சாதாரண மனிதனின் புரிதலுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. இது ஒரு அசாதாரணமான நிகழ்ச்சியாக இருந்ததால், **அக்காலத்திலிருந்த** சில மக்கள் இதனை முழுமையாக எதிர்த்து, ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள்.

1,500 கிலோ மீட்டருக்கும் அதிகமாகச் செய்யப்பட்ட அத்தரைப் பயணம் ஒரு இரவுக்குள் நிறைவுற்றது. பின்பு அங்கிருந்து ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் விண்ணுலகிலுள்ள "சித்ரதுல் முன்தஹா" எனும் இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள்[ஸல்] ஏழு வானங்களைக் கடந்து சென்றார்கள்; ஒவ்வொரு வானத்திலும் கடந்த கால இறைத்தூதர்களைச் சந்தித்தார்கள்; ஒரு நாளைக்கு ஐந்து **நேரங்கள்** தொழ வேண்டுமென்ற கட்டளையை அல்லாஹ்விடமிருந்து நேரடியாகப் பெற்றார்கள்; பின்பு மக்கா நகருக்குத் திரும்பினார்கள். இவையெல்லாம், அதே இரவில் நடைபெற்றவையாகும்.

**மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே**!

சிலர், இப்பயணத்தை ஏற்றுக் கொள்வதற்கு சிரமப்பட்டதற்கானக் காரணங்களில் ஒன்று, இது நீண்ட தூரப் பயணமாக இருந்தது என்பதாக இருந்தாலும், இப்பயணம் மிகக் குறுகிய **காலத்தில்** செய்யப்பட்டதானது முக்கியக் காரணமாக இருந்தது. எனினும், இப்பயணம் மனிதனின் தர்க்க ரீதியில் சாத்தியமற்றதாக இருந்த போதிலும், அல்லாஹ் *அஜ்ஜ வஜல்ல* வைப் பொருத்த வரை, இது சாத்தியமற்ற விஷயமாக இருக்கவில்லை.

இதுதான், "முஃஜிஸா" எனப்படும் அற்புதங்களின் உண்மையான இயற்கைத் தன்மையாகும். அற்புதங்கள் மனிதப் பகுத்தறிவின் வரம்புகளை வெளிப்படுத்துவதுடன், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் முழுமையான வல்லமையையும் மகத்துவத்தையும் வெளிப்படுத்துவதாக உள்ளன. எனவேதான், சற்று முன் ஓதப்பட்ட வசனத்தின் ஆரம்ப வார்த்தை *"சுப்ஹான"* என்றுள்ளது. இவ்வார்த்தை அல்லாஹ்வின் பரிபூரணமானப் புகழையும் மகிமையையும் பிரகடனம் செய்கிறது.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

**இஸ்றா**, **மிஃராஜ்** நிகழ்ச்சியின் மூலம் பெற வேண்டிய முக்கியமானப் பாடங்களில் ஒன்று, **நேரம் மற்றும் காலத்தின் மதிப்பை** உணர்வதாகும். மற்றவர்களைப் பொருத்த வரை, அந்த இரவானது மற்ற இரவுகளைப் போன்று தூங்குவதற்கும் ஓய்வெடுப்பதற்குமான இரவாக இருந்தது. ஆனால், ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களைப் பொருத்த வரை, அந்த இரவானது,

அசாதாரணமான இரவாக இருந்தது. காரணம், அந்த இரவானது ஒட்டு மொத்த சமுதாய மக்களுக்கும் எண்ணற்ற பொருள்களையும் வழிகாட்டுதல்களையும் உள்ளடக்கியதாக இருந்தது.

**இஸ்றா**, **மிஃராஜ்** நிகழ்ச்சியை நாம் கொண்டாட இருக்கும் இந்த வேளையில், இன்றைய "குத்பா" பிரசங்கமானது, **காலம் மற்றும் நேரத்தின்** மதிப்பு சம்பந்தமாக இரண்டு நினைவூட்டுதல்களை உங்களுக்கு வழங்க உள்ளது:

**முதலாவதாக: ஒவ்வொரு நபரும் ஒரே அளவிலான நேரங்களை வழங்கப்பட்டுள்ளார்கள்; ஆனால் அவை எப்படிப் பயன்படுத் தப்படுகிறது என்பதைப் பொருத்து, அவை மதிப்பிடப்படுகின்றன.**

இஸ்லாம் **நேரத்துக்கு** மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்களில் **நேரத்தின்** மீது சத்தியமிட்டுக் கூறுகிறான். உதாரணமாக, "வல் அஸ்ர்" [காலத்தின் மீது சத்தியமாக], வல்-ஃபஜ்ர் [ஃபஜ்ர் நேரத்தின் மீது சத்தியமாக], வல்-ளுஹா [ளுஹா நேரத்தின் மீது சத்தியமாக], வல்-லைல் [இரவின் மீது சத்தியமாக] இவை போன்ற இன்னும் பல வசனங்களில் நேரம் மற்றும் காலத்தின் மீது அல்லாஹ் சத்தியம் செய்கிறான். **நேரம்** என்பது ஒரு விலைமதிக்க முடியாத **அருள்** என்பதை நமக்கு நினைவூட்டவே அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்.

நம்மில் சிலர் **நேரம்** பறக்கின்றது! அதற்குள் ரமதான் மாதம் வந்து விட்டதே! எனக் கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கலாம். சில தருணங்கள் நமது நினைவுகளில் இன்னும் பசுமையாக இருக்கும் நிலையில், பல ஆண்டுகள் கடந்து விட்டதாக நமக்குத் தென்படுகிறது; பல பத்தாண்டுகள் கூட கடந்து விட்டதாகவும் தென்படுகிறது.

உண்மையில், ஒவ்வொரு மனிதரும், ஒவ்வொரு நாளும் 24 மணி **நேரங்களை** வழங்கி, அருள் புரியப்பட்டுள்ளார். எனினும், நேரங்கள் எவ்வாறு நிர்வகிப்படுகின்றன என்பதைப் பொருத்து, ஒருவரது **நேரம்** மற்றவரது நேரத்தை விட **மதிப்பில்** வித்தியாசமாக அமைகின்றது.

உதாரணமாக, நாம் தற்போது ரமதானுக்காகத் தயார் செய்து வருகின்றோம்; இந்நிலையில், ஏற்கனவே நாம் மனனம் செய்துள்ள திருக்குர்ஆன் வசனங்களைத் திருத்திக் கொள்வதற்கோ அல்லது நமது ஓதுதலை முன்னேற்றிக் கொள்வதற்கோ நாம் **நேரத்தை** ஒதுக்கியுள்ளோமா?. அல்லது இவற்றையெல்லாம் பின்பு செய்து கொள்ளலாம் எனக் கூறி, தள்ளிப் போட்டுள்ளோமா? எனச் சிந்திக்க வேண்டும்.

நாம் ஒவ்வொரு செயலையும் **நேரத்தின் மதிப்பை** உணர்ந்து செய்தால், அவை காலப் போக்கில் குறிப்பிடத்தக்க நல்ல மாற்றங்கள் நம்மிடம் ஏற்பட வழிவகுக்கும்.

**இரண்டாவதாக: கடந்த காலத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டாம்; மீதமுள்ள நேரத்தை அறிவுப்பூர்வமாகப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும்.**

கடந்து விட்ட **நேரமும் காலமும்** திரும்பி வரப் போவதில்லை; மீதமுள்ள **நேரங்களானவை**, பழைய தவறுகளை மீண்டும் செய்யாமலிருப்பதற்கான அரிய வாய்ப்புகளாகும். எனவே நமது **நேரத்தை** கவனமாக அமைத்துக் கொள்வோமாக! காரணம் **நேரம்** என்பது ஒரு **அருளாகவும்** வளமாகவும் உள்ளது; அதை அறிவுப்பூர்வமாக நிர்வகித்தவருக்கே அது பலன் தரும்.

நாம் ஆன்-லைனில் **நேரத்தை** எவ்வாறு செலவிடுகிறோம் என்பதைப் பற்றியும் சிந்திப்பது அவசியமாகும். இன்று, நமது அதிகமான **நேரங்கள்** சமூக ஊடகங்களில் செலவிடப்படுகின்றன. இவ்வாறு செலவிடுவது, எனது ஓரிறை நம்பிக்கைக்கும் எனது வாழ்க்கைக்கும் உண்மையான **மதிப்பை** வழங்கியுள்ளதா? அதிகரித்துள்ளதா? அல்லது வெறும் பொழுதுபோக்காக உள்ளதா? நமது ஆன்மாக்கள் காலியாக இருப்பதற்கு அது காரணமாக உள்ளதா? என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

திருக்குர்ஆனின் "இப்ராஹிம்" எனும் அத்தியாயத்தின் 24 மற்றும் 25-வது வசனங்களில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா ஒரு சக்திவாய்ந்த

உதாரணத்தைக் கூறுகிறான்; அதன் பொருள்: ஒவ்வொரு நற்காரியமும் **எல்லாக் காலங்களிலும்** பலன்களைத் தரும் பலமான மரத்தைப் போன்றுள்ளது; நாம் இன்று செய்யும் ஒவ்வொரு நற்செயலும் - அது எவ்வளவு தான் சிறியதாக இருப்பினும் - **காலமெல்லாம்** தொடர்ந்து பலன்களைத் தந்து கொண்டிருக்கும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, **நேரத்தையும் காலத்தையும் மதிக்கின்ற** நல்லடியார்களில் ஒருவராக நம்மை ஆக்குவானாக! அதன் மூலம் நாம் இம்மையிலும் மறுமையிலும் வெற்றியை அடைவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

பாலஸ்தீன காஸா வில் நமது சகோதர, சகோதரிகள் தொடர்ந்து கடுமையான அடக்குமுறையை எதிர்கொண்டு வருகிறார்கள். கவலைக்குரிய இந்நிலை அவர்களுக்கு ஏற்பட்டு, மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன எனும் உண்மையை நம்மில் சிலர் அறியாமலிருக்கலாம். நமக்கும் அம்மக்களுக்கும் மத்தியில் தொலை தூரம் பிரிப்பதாக இருந்தாலும், நாம் அவர்களுக்கு நமது பிரார்த்தனைகள் மற்றும் ஒன்றுபட்ட முயற்சிகள் மூலம் உதவி செய்ய முடியும்.

சமீபத்தில், அம்மக்களுக்கு உதவுவதற்காக, **"ரஹ்மதன் லில் ஆலமீன்"** எனும் அமைப்பானது "Aid for Gaza" எனும் தலைப்பில் உதவிகளைச் சேகரிப்பதற்காக முயற்சி செய்து வருகிறது. இம்முயற்சி, 31 மார்ச் 2026 வரை இன்ஷாஅல்லாஹ் தொடரும். தங்குமிடங்கள், மருத்துவமனைகள், சமுதாய சமையலறைகள் ஆகியவற்றை காஸா வில் நிறுவுதற்காக இம்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

அம்மக்களுக்கு, நமது "ரஹ்மத்" எனும் கிருபையையும், "இஹ்ஸான்" எனும் உபகாரச் சிந்தனையையும் வெளிப்படுத்தும் வகையில், நமது சக்திக்குத் தக்கவாறு உதவிக்கரம் நீட்டுவோமாக! எல்லாம் வல்ல அல்லாஹ், உலக மக்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு கஷ்டத்தையும் போக்குவானாக! அவர்கள் அனைவருக்கும் அமைதியை ஏற்படுத்துவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِينَ فِي غَزَّةَ وَفِي فِلَسْطِينَ وَفِي كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ

**يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.**